# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குழித்துறை நகராட்சி

**குழித்துறை நகர் மன்றத்தின் 08–03–2019 வெள்ளிக்கிழமை நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

பொருள் எண்.1

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களது சுற்றறிக்கை Roc.No.44555/2013/P3 நாள்: 28.02.2019ன் படியும், 2019 ஆம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் 12 ன்படியும் (The Tamil Nadu Municipal Laws (second Amendment) Act 2019 Published in Tamil Nadu Governement Gazette Extraordinary No.75, Date : 21.02.2019) மற்றும் தமிழ்நாடு அரசின் சுற்றுபுற சூழல் மற்றும் வனத்துறை அரசாணை எண். 84 நாள். 25.06.2018ன்படியும் தமிழக நகராட்சிப்பகுதிகளில் ஒரு தடவை மட்டும் பயன்படுத்தப்பட்டு மற்றும் தூக்கி வீசப்பட கூடிய நெகிழியை தயாரித்தல், சேகரித்தல், வழஙகுதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை தடை செய்ததன் அடிப்படையில் துணை விதிகள் ஏற்படுத்தியோ, அல்லது ஏற்கனவே இயற்றப்பட்ட துணைவிதிகளில் திருத்தஙகள் மேற்கொண்டு அரசிதழில் வெளியிட தெரிவித்துள்ளதன் அடிப்படையில் குழித்துறை நகராட்சிப்பகுதிகளில் ஒரு தடவை மட்டும் பயன்படுத்தப்பட்டு மற்றும் தூக்கி வீசப்பட கூடிய நெகிழியை தயாரித்தல், சேகரித்தல், வழஙகுதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை தடை செய்தும் ஏற்கனவே இயற்றப்பட்ட குழித்துறை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016 (கன்னியாகுமரி மாவட்ட அரசிதழ் எண்.3, நாள்: 02.03.2018) இல் கீழ்க்கண்ட திருத்தஙகள் செய்யவும் அரசிதழில் வெளியிடவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

2016 ஆம் ஆண்டு குழித்துறை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிக்கான திருத்தஙகள்.

| | | |
|---|---|---|
| பிரிவு 3ற்கான திருத்தஙகள் | | 2016 ஆம் ஆண்டு குழித்துறை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 3 ஆம் பிரிவில் 22 ஆம் எண்ணிற்கு பின்பு பின்வரும் சொற்களின் பொருள்கள் சேர்க்கப்பட்டுள்ளது. |
| | 23 | செயலாக்க அதிகாரி: நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர். |
| | 24 | ஆய்வு நடத்தும் அதிகாரி: ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப்பகுதிகளில் சுகாதார ஆய்வாளர், சுகாதார அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்கள். |
| | 25 | மேல்முறையீட்டு அலுவலர்: இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார். |
| | 26 | தண்டணைகள் விதிக்கும் முறைகள்: இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு முதல் இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறை குற்றத்திற்கு அட்டவணை (2)ல் கண்டுள்ளவாறு நிர்ணம் செய்யப்பட்டுள்ள அபராதத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே (Spot fine) வசூலிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல் செய்யப்படும். நான்காவது முறையாக மீறுபவருக்கு உடனடியாக தொழில் உரிமம் இரத்து செய்யப்படும். |

| | | |
|---|---|---|
| | 27 | வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு |
| | | I. மொத்தமாக (Whole sale) சேமித்தல்/வழஙகுதல்/கொண்டு செல்லுதல்/விற்பனை செய்தல்/பகிர்ந்தளித்தல் |
| | | II. வணிக வளாகஙகள், துணிக்கடைகள் பல்பொருள் அஙகாடிகள், திரை அரஙகுகள், திருமண மண்டபஙகள், மதுபான கூடஙகள், தொழிற்சாலைகள், பள்ளி கல்லூாி நிறுவனஙகள் மற்றும் பெரிய வணிக நிறுவனஙகள். |
| | | III. மளிகை கடைகள், மருத்து கடைகள், பழக்கடைகள், காய்கறி கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள், முதலானவைகள். |
| | | IV. சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோரக்கடைகள் மற்றும் இதர வணிக நிறுவனஙகள். |
| பிரிவு 4க்கான திருத்தஙகள் | | 2016 ஆம் ஆண்டு குழித்துறை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 4 ஆம் பிரிவில் (2)ஆம் கூறுக்கு பின்பு பின்வரும் கூறு சேர்க்கப்படும். |
| | 2(1) | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேகரித்தல், வழஙகுதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவை தடை செய்யப்படுகின்றன. மீறினால் பொருட்களை பறிமுதல் செய்வதுடன் அபராத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டிய வரும். |
| பிரிவு 6க்கான திருத்தஙகள் | | 2016ஆம் ஆண்டு குழித்துறை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 6 ஆம் பிரிவில் |
| | 2 | நீக்கம் செய்யப்படுகிறது. |
| | 3 | நீக்கம் செய்யப்படுகிறது. |
| | 4 | நீக்கம் செய்யப்படுகிறது. |
| பிரிவு 7க்கான திருத்தஙகள் | | 2016ஆம் ஆண்டு குழித்துறை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 7 ஆம் பிரிவில் |
| | (a) | நீக்கம் செய்யப்படுகிறது. |
| பிரிவு 8க்கான திருத்தஙகள் | 8.1 | இந்த திருத்தப்பட்ட துணை விதிகள் தொடஙகிய நாளும் அதற்கு பின்பும், பழக்கப்படும்/எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கு பிறகு இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணை I,II ன் படி இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார். |
| | 8.2 | அட்டவணை I,II ல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம்/இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம்/மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920/பொது சுகாதார சட்டம் 1939ன்படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும். |

2016 ஆம் ஆண்டு குழித்துறை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் அபராத அட்வணை I க்கு பின்பு அட்டவணை II சேர்க்கப்படுகிறது.

அட்டவணை II

| வ. எண். | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம். |
|---|---|---|---|---|
| 1. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல். | 25000 | 50000 | 100000 |
| 2. | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 10000 | 15000 | 20000 |
| 3. | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துகடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | 1000 | 2000 | 5000 |
| 4. | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | 100 | 200 | 500 |

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசிதழில் வெளியிடுவதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1151/2019/அ2

**நகர்மன்றத் தீர்மான எண். 3272**

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.2

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களுக்கு 8–3–2019–ம் தேதி வெள்ளிக்கிழமை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியத்தில் வரப்பெற்ற ஏலக்கேள்வி/ ஒப்பந்தப்புள்ளி தொகையினை மன்றத்தின் பார்வைக்கு.

| வ. எண் | ஒப்பந்த ப்புள்ளி அறிக்கையின் வரிசை எண் | குத்தகை இனஙகளின் விபரம் | குத்தகைதாரர் பெயர் | ஏலக் கேள்வி ரூபாய் | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | உச்ச தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| **ஆண்டு குத்தகை உரிமம்** | | | | | | |
| 1 | 1 | நகராட்சிக்கு சொந்தமான பலன்தரும் மரஙகளின் மேலாதாயம் வசூல் செய்யும் உரிமம் | திரு.T. சுரேஷ் | – | 30000 | 30000 |
| 2 | 2 | பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கான கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | எவரும் வைப்புத் தொகை செலுத்தி ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை | | | |
| 3 | 3 | மார்த்தாண்டம் பேருந்து நிலையத்திற்குள் அமைந்துள்ள இருசக்கர வாகன காப்பகம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | எவரும் வைப்புத் தொகை செலுத்தி ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை | | | |
| **22–02–2019 அன்று நடைபெற்ற ஏலத்தில் குத்தகைக்கு செல்லாத கடைகள் மாதாந்திர வாடகை அடிப்படையில் குத்தகை உரிமம்** | | | | | | |
| 4 | 4 | தினசரி சந்தையினுள் உள்ள **எ.பிரிவு** கடைகள் 27, 28, 29, 30, 31, 32, 33, 37, 38, 41, 42, 46, 47, 48, 49, 52, 53 | எவரும் வைப்புத் தொகை செலுத்தி ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை | | | |
| 5 | 5 | தினசரி சந்தையினுள் உள்ள **பி.பிரிவு** கடைகள் 23, 24, 25, 26, 30, 31, 32, 33, 34, 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45 | எவரும் வைப்புத் தொகை செலுத்தி ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை | | | |
| 6 | 6 | தினசரி சந்தையில் மீன்சந்தையின் அருகில் புதியதாக கட்டப்பட்டுள்ள தற்காலிக கடைகள் எண். 4, 5, 6, 7, 10, 11, 12, 13, 16 மற்றும் மார்த்தாண்டம் காய்கறி சந்தையில் 3–வது நுழைவாயில் பக்கத்திலுள்ள 1 கடை | எவரும் வைப்புத் தொகை செலுத்தி ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை | | | |
| 7 | 7 | மார்த்தாண்டம் பேருந்து நிலையம் பிளாக் A. கடை எண்.2 , 3, 5 முதல் 8 மற்றும் 12 | எவரும் வைப்புத் தொகை செலுத்தி ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை | | | |
| 8 | 8 | நகராட்சி அலுவலகம் முன்புறம் உள்ள கடைகள்– 6, 7 | எவரும் வைப்புத் தொகை செலுத்தி ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை | | | |
| 9 | 9 | பி.பி.முனிசாமி வணிகவளாக கடைகள் G2, G3, G4, G5, F4, F6, F7, F8, F10, F11, F12, | எவரும் வைப்புத் தொகை செலுத்தி ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை | | | |
| 10 | 10 | குழித்துறை சந்திப்பு வணிகவளாக கடைகள்–4, 6, 7 | எவரும் வைப்புத் தொகை செலுத்தி ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை | | | |

| | | | |
|---|---|---|---|
| 11 | 11 | குழித்துறை நகராட்சி கிராமம், புல எண்.பி3/244—ல் ஆபத்தான நிலையில் நிற்கும் அயணி மரத்தினை முறித்து அப்புறப்படுத்தி எடுத்து செல்லுதல் | எவரும் வைப்புத் தொகை செலுத்தி ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை |

அ.கு :— வரிசை எண்.1—க்கு கோரியுள்ள தொகையானது கடந்த வருட குத்தகை தொகையினை விட அதிகமாக இருப்பதாலும், அரசாங்க மதிப்பை விட அதிகமாக இருப்பதாலும் மேலும் வரிசை எண்.1—க்கு 31-03—2019 உடன் குத்தகை காலம் முடிவடைவதாலும் தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் அமுலில் வர உள்ளதால் மீண்டும் மறுஏலம்/ மறுஒப்பந்தப்புள்ளி கோர காலஅவகாசம் இல்லாததால் வரிசை எண்.1—ல் கோரியுள்ள உச்ச தொகையினை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

வரிசை எண்.2 முதல் 11 வரையுள்ள இனஙகளுக்கு எவரும் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர வரததால் மறு ஏலம்/ மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3273**

**வரிசை எண் (1) ஒன்றிக்கு உரிமம் வழஙகலாம். வரிசை எண்(2) முதல் 11 வரையுள்ள இனஙகளுக்கு மறுஏலம் கோரலாம்.**

<u>பொருள் எண்.3</u>

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ2/194/2016, நாள் 11—02—2018—ல் ஏற்கனவே டெஙகு பணிக்கு வழஙகப்பட்ட தினகூலி தொகை ரூ.430/—லிருந்து நாள் ஒன்றுக்கு ரூ.180/— குறைவு செய்து ரூ.250/— வீதம் வழஙக அனுமதியளித்ததன் அடிப்படையில் இந்நகராட்சியில் டெஙகு பணிகள் மேற்கொள்ளும் 20 பணியாளர்களுக்கு ஊதியம் வழஙக வேண்டியுள்ளதால் 1—2—2019 முதல் 30—04—2019 வரையுள்ள காலத்திற்கு உத்தேச செலவினம் ரூ.4.50 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
ந.க.எண்.7013/2018/அ2.

**நகர்மன்றத் தீர்மான எண். 3274**

**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.4</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பழைய தியேட்டர் சந்திப்பிலுள்ள கட்டண கழிப்பறை மற்றும் கல்பாலத்தடி கழிப்பறை இரண்டும் சேர்த்து கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 2018—2019—ம் வருடத்திற்கு பொது ஏலம் விடப்பட்டதில் திரு.சி. ராஜமணி என்பவர் வருட குத்தகை தொகையாக ரூ.39,000/—த்திற்கு குத்தகைக்கு எடுத்துள்ளார். தற்போது இந்நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளரின் 9—1—2019—ம் தேதிய குறிப்பில் மார்த்தாண்டம் மேம்பால கட்டுமான பணிகளுக்கு பழைய தியேட்டர் சந்திப்பிலுள்ள கட்டண கழிப்பறை இடையூறாக இருப்பதால் மேற்படி கழிப்பறையினை இடித்து அப்புறப்படுத்திட நெடுஞ்சாலை துறையினரால் கேட்டுள்ளதன் அடிப்படையில் மேற்படி கழிப்பறையினை நெடுஞ்சாலை துறையால் இடித்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது 2019—2020—ம் வருடத்திற்கு பழைய தியேட்டர் சந்திப்பிலுள்ள கட்டண கழிப்பறை இடித்து அப்புறப்படுத்தியுள்ளதால் கல்பாலத்தடி கழிப்பறைக்கு மட்டும் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருவதாகவும் குத்தகைதாரர் அறிக்கை செய்துள்ளார். ஆகவே மேற்படி இனம் மூன்றாவது

காலாண்டு ஆகையால் **2019–2020–**ம் வருடத்திற்கு கல்பாலத்தடி கட்டண கழிப்பறையினை மேற்படி குத்தகைதாரர் அனுபவித்து வருவதாலும் பொது ஏலம் விட கால அவகாசம் இல்லாததாலும் இந்த ஒருவருடத்திற்கு கல்பாலத்தடி கழிப்பறையினை மட்டும் தொகையினை நிர்ணயம் செய்து வழங்க மன்ற அனுமதிக்கு.

**நகர்மன்றத் தீர்மான எண். 3275**

**பொதுஏலம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.**

ஆணையாளர் மற்றும்
தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.